Deposition of witness
(Chapter XXIII Code of Criminal Procedure
District Munsif cum Judicial Magistrate Court, Alangudi.
CC No. 111 /2023

## Deposition of P.W.5

| | | |
|---|---|---|
| Name | : | கிருஷ்ணமூர்த்தி |
| Father's Name | : | செல்லையா |
| Village | : | வடவாளம் |
| Religion | : | இந்து |
| Age | : | **60/2024** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 03.09.2024**
(2 முதல் 5 வரையான எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர். 1வது எதிரி அய்யப்பன் நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. 1வது எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட குவிமுச பிரிவு 317ன் கீழான மனு அனுமதிக்கப்பட்டது)

**முதல்விசாரணை**

நான் வடவாளத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜர் ஆவணத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். சுமார் **2** வருடங்களுக்கு முன்பு இருக்கும். ஒருநாள் மதியம் சுமார் **2.00** மணியளவில் சம்மட்டிவிடுதி போலிசார் எங்கள் ஊரில் உள்ள ஆறுமுகம் என்பவரது வீட்டில் ஆடுகள் திருடுபோனது தொடர்பாக ஆறுமுகம் வீட்டிற்கு வந்து சம்பவ இடத்தை பார்வையிட்டு அருகில் உள்ளவர்களை விசாரித்து வரைபடம் வரைந்து எழுதினார்கள். அதில் நானும், செல்வராஜ் மகன் திருப்பதி என்பவரும் சாட்சி கையொப்பம் செய்துகொடுத்தோம். சாட்சியால் கையொப்பம் செய்யப்பட்ட பார்வை மகஜர் ஆவணம் அ.சா.ஆ.**5**ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தனர். நடந்த விபரம் கூறினேன்.

எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

ஆறுமுகம் வீட்டிலிருந்து எங்கள் வீடு எவ்வளவு தொலைவில் உள்ளது என்றால் 5,6 வீடுகள் தள்ளி சுமார் 50 அடி இடைவேளியில் உள்ளது. செல்வராஜ் மகன் திருப்பதி என்பவர் எனது உறவினர் என்றால் இல்லை. அவர் உள்ளூர்காரர். புகார் அளித்த அன்றே போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றால் மறுநாள் விசாரித்தார்கள். போலிசார் என்னிடம் கையொப்பம் போடுமாறு கேட்டதாக கூறும் சமயத்தில் அந்த இடத்தில் என்னுடன் யார்யார் இருந்தார் என்றால் கூட்டமாக இருந்தார்கள். யார்யார் என்று ஞாபகம் இல்லை. நானும்,

திருப்பதியும் கையொப்பம் செய்து கொடுத்தோம். நானும் திருப்பதி என்பவரும் சம்பவ இடத்தில் வைத்து சாட்சி கையொப்பம் செய்து கொடுக்கவில்லை என்றாலும், காவல் நிலையத்தில் வைத்து சாட்சி கையொப்பம் செய்து கொடுத்தோம் என்றாலும் சரியல்ல.

ம.வி.இல்லை